IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No.11 /2015
Deposition of witness for DW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாஸ்கர் நாயுடு | Caste | : | |
| Father Name | : | செங்கம்மா நாயுடு | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 1st day of June, 2026.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் பெங்களூரில் ஒரு தனியார் கம்பெனியில் சூப்பர்வைசராக கடந்த 10 ஆண்டு காலமாக வேலை செய்து வருகிறேன். என்னுடைய தாயாரான சின்னக்கா தான் முதல் பிரதிவாதி என்று சொன்னால் சரிதான். முதல் வாதி என் பெரியப்பா ஆவார். அதன் பிறகு அவர் குடும்பத்தார் இந்த வழக்கை நடத்துகிறார்கள் என்றால் சரிதான். 13.02.1963 ல் நடந்த பாகபிரிவினைப் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அப்போது நான் பிறக்கவில்லை. 1976 ல் தான் நான் பிறந்தேன். 1998 ல் நடந்த பாகபிரிவினை பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். Ex B2 வில் குறிபிடபட்டுள்ள செங்கம்மா நாயுடு எனது தகப்பானார் ஆவார். கேசவ நாயுடு எனது சித்தப்பா ஆவார். வாதியுடைய குடும்பம் மேற்படி பாகபிரிவினையில் இல்லை என்று சொன்னால்

சரிதான். Ex B1 ல் குறிபிடபட்டுள்ள கேசவ நாயுடு எனது சித்தப்பா என்று சொன்னால் சரிதான். 1988 ல் வாக்கில் சொத்தை பதிவு செய்யும் போது அடையாள அட்டை பொதுவாக கேட்பதில்லை என்று சொன்னால் இல்லை அப்போது ரேசன் அட்டை இருந்தது. பத்திர பதிவு செய்வதற்கு 1988 ல் நான் செல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய சித்தப்பாவின் போட்டோ அல்லது சொத்தை விற்பனை செய்ததாக சொல்லப்படும் சுப்ரமணி போட்டோவும் பத்திரத்தில் ஒட்டபடவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி இரண்டு ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF,
KATPADI.